4.12 33

APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE

AN

ELEMENTARY GRAMMAR

OF THE

TAMIL TONGUE—I

26 JAN 1923

BY

C. R. NAMASIVAYA MUDALIAR,

Lecturer in Tamil, Queen Mary's College, Madras

MADRAS:

C. COOMARASAWMY NAIDU & SONS

1923

[Price, 3 As.

JB
P31(4)
N23
179897

சிற்றிலக்கண வினா விடை

நான்காம் வகுப்பிற்கு நன்கமைந்தது

மேரி யரசியார் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதரும்
'நல்லாசிரியன்' பத்திராதிபரும் ஆகிய
கா. நமச்சிவாய முதலியார்
எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை:
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
1923

[ரெஜிஸ்தர் செய்தது] [விலை 3 அணா

PRINTED AT
THE "CAXTON PRESS"
MADRAS

முகவுரை

கீழ் வகுப்புக்களில் இலக்கணபாடத்தில் எளிய விதிகளை-யாவது கற்பித்தல் இன்றியமையாததாம். அப்படிச் செய்யாமையால் மாணுக்கர், மேல்வகுப்புக்களுக்கு வந்தும், சாதாரண சந்திகளையும் உணராமற் பிழைசெய்து இடர்ப்படுகின்றனர். கலாசாலையில் வாசிக்கும் மாணுக்கர்களும் **தமிழ்பாளை, வாளைபழம், அவனை கண்டேன்** என்று எழுதுகின்றனர். எத்தனைமுறை திருத்தினுலும் அப்பிழைகள் திருந்துவதில்லை. தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டும் தொடரும் அன்றே?

சந்திபிரித்து வாசிக்கத் தெரியாமையினுலே சிறுவர்கள் செய்யுட் பாடத்தை வெறுக்கத் தலைப்படுகின்றனர். சந்தியிலக்கணம் தெரியாமையால் வியாசம் எழுதுவதிலும் அவர்கள் பெரிதும் இடர்ப்பட்டுப் பிழைசெய்கின்றனர்.

இத்தகைய குறைவுகளை நீக்குவதற்குக் கீழ்வகுப்புகளி-லிருந்தே இலக்கணபாடம் சிறிது சிறிதாகக் கற்பிக்கப்படு-தல் அவசியமாகும். இந்நோக்கத்தைக்கொண்டே **பொது மத்திய முறை** (Concentric System) யை அனுசரித்து **சிற்றிலக்கண வரிசைகள்** எழுதப்பட்டுள்ளன.

கா. நமச்சிவாயன்.

பொருள் அடக்கம்

எண்	விஷயம்	பக்கம்
I.	எழுத்து	5
	1. உயிர் எழுத்து	6
	2. மெய் எழுத்து	7
	3. உயிர்-மெய் எழுத்து	9
	4. ஆய்த எழுத்து	10
II.	சொல்	12
	1. பெயர்ச் சொல்	12
	2. வினைச் சொல்	24
	3. இடைச் சொல்	31
	4. உரிச் சொல்	32
III.	வாக்கியம்	33
IV.	சந்தி	45

சிற்றிலக்கண வினு விடை

I. எழுத்து

1.—*தமிழ் இலக்கணம் என்ருல் என்ன?*

தமிழ்ப் பாஷையைத் திருத்தமாகப் பேசவும் எழுதவும் கற்பிக்கும் நூல் தமிழ் இலக்கணமாம்.

2.—*தமிழ் எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? அவை எவை?*

தமிழ் எழுத்துக்கள் நான்கு வகைப்படும். அவை :

(1) உயிர் எழுத்து, (3) உயிர் - மெய் எழுத்து,
(2) மெய் எழுத்து, (4) ஆய்த எழுத்து

என்பனவாம்.

பயிற்சி — I.

(1) இலக்கணம் என்ருல் என்ன ?
(2) நான்கு வகையான எழுத்துக்கள் எவை ?

1. உயிர் எழுத்து

3.—உயிரெழுத்தென்றால் என்ன? அது எத்தனை?

மற்றோர் எழுத்தின் உதவியின்றித் தானே ஒலிக்கவல்ல எழுத்து உயிர் எழுத்தாம். அது — அ-ஆ, இ-ஈ, உ-ஊ, எ-ஏ, ஐ, ஒ-ஓ, ஔ எனப் பன்னிரண்டாம்.

4.—அவற்றுள் குறில் (குறுகிய ஓசையுடையவை) எவை?

அ, இ, உ, எ, ஒ என்னும் இவ் வைந்தும் குறிலாம்.

குறிப்பு—இவை குற்றெழுத்து எனவும் பெயர்பெறும்.

5.—நெடில் (நீண்ட ஓசை யுடையவை) எவை?

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் இவ்வேழும் நெடிலாம்.

குறிப்பு—இவை நெட்டெழுத்து எனவும் பெயர் பெறும்.

6.—சுட்டெழுத்து எவை?

அ, இ, உ இம் மூன்று எழுத்துக்களும் ஒரு பொருளைக் குறித்துக் காட்டும்போது சுட்டெழுத்தாம்.

அவன்	இவன்	உவன்
அம் மனிதன்	இப் பிள்ளை	உவ் வீடு

7.—வினவெழுத்து எவை?

ஆ, எ, ஏ, ஓ, யா என்னும் ஐந்து எழுத்துக்களும் வினவை உணர்த்தும்போது வினவெழுத்தாம்.

அவனா	இவனா	அதுவா	(ஆ)
எவன்	எது	எவள்	(எ)
ஏது	ஏன்	ஏவன்	(ஏ)
அவனோ	இவனோ	அதுவோ	(ஓ)
யாது	யாவன்	யார்	(யா)

பயிற்சி — 2.

(1) உயிரெழுத்துக்களின் பிரிவுகள் எத்தனை? அவை எவை?

(2) ஒவ்வொரு பிரிவிலும் அடங்கி யுள்ள எழுத்துக்களைச் சொல்லு?

(3) கீழ் எழுதிய வாக்கியங்களிலுள்ள உயிர் எழுத்துக்களை மாதிரியாகக் காட்டி யிருக்கும் அட்டவணையில் அமைத்து எழுது:

1. இந்த அரிசி உயர்வானது.
2. என் ஆடு எங்கே?
3. அவன் ஏன் ஓடினான்?
4. ஈக்கள் எங்கே இருக்கும்?
5. ஔவையார் ஊருக்குப் போனார்.
6. நீ பார்த்தது அந்த ஒட்டகமோ? (ஓ)

பதம்	குறில்	நெடில்	சுட்டு	வினா

2. மெய் எழுத்து

8.—மெய்யெழுத்தென்றால் என்ன? அவை யெவை?

உயிரெழுத்தின் உதவியின்றி ஒலிக்காத எழுத்து மெய்யெழுத்தாம். அவை தம்மேல் புள்ளிகளை யுடையன.

க் - ங், ச் - ஞ், ட் - ண், த் - ந், ப் - ம், ய் ர் ல் வ் ழ் ள், ற்-ன் என்னும் இப் பதினெட்டும் மெய்யெழுத்தாம்.

உபாத்தியாயருக்கு — மெய் எழுத்துக்களை வேறு விதமாக உச்சரிக்கக் கூடாமையால் இக், இங், இச் என உச்சரிக்க நேரிடுகின்றது. ஆனல், அவை இவ் வெழுத்துக்களின் உச்சரிப்பு அன்றென்பதை சிறுவர்க்கு நன்கு விளக்குக.

9.—மெய்யெழுத்துக்கள் எத்தனை வகையாம்?

மெய்யெழுத்துக்கள் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகையாம்.

10.—வல்லெழுத்துக்கள் எவை?

க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறும் வல்லெழுத்துக்களாம்.

11.—மெல்லெழுத்துக்கள் எவை?

ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறும் மெல்லெழுத்துக்களாம்.

12.—இடை எழுத்துக்கள் எவை?

ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறும் இடையெழுத்துக்களாம்.

பயிற்சி — 3.

(1) மெய்யெழுத்துக்களை யெல்லாம் எழுதி, அவற்றின் பிரிவுகளின்படி அவற்றைப் பிரித்துக் காட்டு.

(2) மெய் யெழுத்தை எதனல் அறியலாம்?

(3) கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள மெய்யெழுத்துக்கள் எந்தப் பிரிவில் சேர்ந்தவை? அட்டவணையில் பொருத்து.

1. கந்தன் பள்ளிக்கூடம் போனான்.
2. பட்டணத்தில் பஞ்சந் தோற்றது.
3. திங்கள் அல்லது செவ்வாய் வருவார்.
4. எப்போதும் தாழ்மையாகப் பேசு.
5. இந்தக் கிண்ணம் பிச்சைக்காரன் வைத்தது.

சொல்	வல்லினம்	மெல்லினம்	இடையினம்

3. உயிர்-மெய் எழுத்து

13.—உயிர்மெய் யெழுத்தென்றால் என்ன?

உயிரும் மெய்யும் கூடிப் பிறக்கும் எழுத்து உயிர்மெய் எழுத்தாம்.

14.—உயிர்மெய் எழுத்துக்கள் எப்படி உண்டாகின்றன? அவை எத்தனை?

ஒவ்வொரு மெய்யின் மேலும் பன்னிரண்டு உயிர்களும் தனித்தனி ஏறுவதனால், உயிர்மெய் யெழுத்துக்கள் உண்டாகின்றன.

க் + அ = க	க் + உ = கு	க் + ஐ = கை
க் + ஆ = கா	க் + ஊ = கூ	க் + ஒ = கொ
க் + இ = கி	க் + எ = கெ	க் + ஓ = கோ
க் + ஈ = கீ	க் + ஏ = கே	க் + ஔ = கௌ

குறிப்பு—இப்படியே 18 மெய்களின் மேலும் 12 உயிர்களும் தனித்தனி ஏற (18 × 12) = 216 உயிர்மெய் யெழுத்துக்கள் உண்டாகும். இவற்றில், மெய் முன்னும் உயிர் பின்னும் நிற்கும். (11-ஆம் பக்கம் பார்.) அவற்றுள், தடித்த எழுத்தி லுள்ள (18 × 5) = 90 எழுத்துக்களும் உயிர்மெய்க்

குறிலாம். சாதாரண எழுத்திலுள்ள (18 × 7) = 126 எழுத்துக்களும் உயிர்மெய் நெடிலாம்.

பயிற்சி — 4.

(1) கீழ்வரும் எழுத்துக்களைப் பிரித்தெழுது:

ச	கௌ	டி	கு	ஒரு	ஒற	பை
வை	ஊ	ணே	ன	நூ	சோ	தீ
போ	லா	ஏ	சீ	பு	ழு	னௌ

(2) கீழ்வரும் எழுத்துக்களைச் சேர்த்தெழுது:

த் + எ	ங் + ஔ	ந் + ஆ	ப் + அ
ம் + ஊ	ப் + ஊ	ர் + ஊ	ன் + இ
ய் + எ	த் + ஐ	வ் + ஈ	ம் + எ

4. ஆய்த எழுத்து

15.—ஆய்த எழுத்து எப்படி இருக்கும்? அது எங்கே வரும்?

ஆய்த எழுத்து மூன்று புள்ளி வடிவாயிருக்கும்; அது சொல்லின் இடையில் மட்டும் வரும்.

அஃது, இஃது, எஃது

16.—தமிழ்ப் பாஷையில் வந்து வழங்கும் சம்ஸ்கிருத எழுத்துக்கள் எவை?

ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்னும் ஐந்து சம்ஸ்கிருத எழுத்துக்கள் தமிழில் வந்து வழங்குகின்றன.

ஜயம், விஷம், ஸாக்ஷி, ஹரி, பக்ஷம்.

மெய்	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
க் +	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ங் +	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ச் +	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ் +	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட் +	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண் +	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த் +	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந் +	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப் +	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம் +	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய் +	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர் +	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல் +	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ் +	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ் +	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள் +	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ற் +	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன் +	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ

II. சொல்

17.—சொல் என்ருல் என்ன ?

ஓர் எழுத்துத் தனித்தாவது, பல எழுத்துக்கள் ஒன்று சேர்ந்தாவது ஒரு பொருளைத் தெரிவிப்பது சொல்லாம்.

18.—சொற்கள் எத்தனை வகைப்படும் ? அவை எவை ?

சொற்கள் நான்கு வகைப்படும். அவை,

(1) பெயர்ச் சொல், (3) இடைச் சொல்,
(2) வினைச் சொல், (4) உரிச் சொல்

என்பனவாம்.

1. பெயர்ச் சொல்

19.—பெயர்ச்சொல் என்ருல் என்ன ?

பொருளின் பெயரைத் தெரிவிப்பது பெயர்ச்சொல்லாம்.

20.—பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும் ? அவை எவை ?

பெயர்ச் சொல் — 1. பொருட் பெயர், 2. இடப் பெயர், 3. காலப் பெயர், 4. சினைப் பெயர், 5. பண்புப் பெயர், 6. தொழிற் பெயர் என ஆறு வகைப்படும்.

1. மனிதன், மரம், யானை......பொருட் பெயர்
2. தேசம், கிராமம், காடு.........இடப் பெயர்.
3. நாள், சனி, ஆவணி........காலப் பெயர்.

4. கை, தலை, கிளை.........சினைப் பெயர்.
5. செம்மை, நன்றி, நலம்.........பண்புப் பெயர்.
6. நடத்தல், செய்கை, வரவு ......தொழிற் பெயர்.

உபாத்தியாயருக்கு — பெயர்ச்சொல்லைக் கற்பிக்கையில் பொருள் தானே பெயர்ச்சொல் அன்று என்றும், அந்தப் பொருளுக்கு இட்டிருக்கும் **பெயரே பெயர்ச்சொல்** என்றும் தெரிவிக்கவேண்டும். உதாரணமாக — **புத்தகம்** என்னும் பொருள் பெயர்ச்சொல் அன்று ; **புத்தகம்** என்னும் அதன் பெயரே பெயர்ச்சொல் என்க.

21.—பெயர்ச் சொல்லில் எத்தனை பொருளை அறிய வேண்டும் ?

பெயர்ச் சொல்லில் திணை, பால், எண், இடம், வேற்றுமை என ஐந்து பொருளை அறியவேண்டும்.

(1) திணை

22.—திணை என்றால் என்ன ?

திணை யென்பதற்குக் குலம் என்பது பொருள். அது உயர்திணை, அஃறிணை என இரண்டு வகைப்படும்.

23.—உயர்திணை என்பது யாது ?

மக்கள், தேவர் ஆகிய இவர்கள் பெயரைக் காட்டுவது உயர்திணையாம்.

மக்கள் — கம்பன், சீதை, மனிதர்.
தேவர் — பிரமன், இந்திரன், தேவர்.

24.—அஃறிணை என்பது யாது?

மக்கள், தேவர் ஆகிய இவர்கள் பெயர்கள் தவிர மற்றப் பொருள்களின் பெயரைக் காட்டுவது அஃறிணையாம்.

[அல் + திணை = அஃறிணை; அல் = அல்லாத (உயர்வு அல்லாத), திணை = குலம்].

மரம், வீடு, பசு, கிளி, மலை, ஆறு.

(2) பால்

25.—பால் என்பதென்ன?

பால் என்பது திணையின் பகுப்பு; அது ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என ஐந்து வகைப்படும்.

1. ஆண்பால்—(ஆண் ஒருமை) — முருகன், அரசன்.
2. பெண்பால்—(பெண் ஒருமை) — மீனுட்சி, அரசி.
3. பலர்பால் { ஆண் பன்மை..........அரசர்கள்; பெண் பன்மை..........அரசிகள்; ஆண்பெண் பன்மை ....மக்கள். }
4. ஒன்றன்பால்(ஒன்றை யுணர்த்துவது) ... .மாடு
5. பலவின்பால்(பலவற்றை யுணர்த்துவது)மரங்கள்.

26.—உயர்திணை, அஃறிணைகளுக்கு உரிய பால்கள் எவை?

ஆண் பால், பெண் பால், பலர் பால் ஆகிய மூன்றும் உயர்திணைக்கு உரியன.

ஒன்றன் பால், பலவின் பால் ஆகிய இரண்டும் அஃறிணைக்கு உரியன.

குறிப்பு—அஃறிணையிலும் **சேவல்-பேட்டை, கடா-மறி** என ஆண் பெண்களுக்கு வெவ்வேறு பெயர்கள் ஏற்பட்டிருக்கின்றன; ஆயினும், அவ்வாறே மற்றெல்லாவற்றிற்கும் ஏற்பட்டிராமையால், அஃறிணையில் ஆணாயினும் பெண்ணாயினும் ஒன்றன்பால் என்று சொல்வதே வழக்கம்.

பயிற்சி - 5.

1. ஒவ்வொரு பாலுக்கும் ஐந்து உதாரணம் எழுது.

2. சேவகன், புத்தகங்கள், நாய், குதிரை, லக்ஷ்மி, பசுபதி, பசு, ரங்கன், பூனை, மனிதர், வௌவால் — இவற்றில் ஒவ்வொன்றும் என்ன பால்?

3. சீமான், பொன்னன், தம்பி, கிறிஸ்தவன், அக்கை, மாமன், தட்டான், பால்காரன், அரசன், பாட்டன், சக்கரவர்த்தி, திருடன்—இவற்றில் ஆண்பாலுக்குப் பெண்பாலும் பெண்பாலுக்கு ஆண்பாலும் எழுது.

(3) எண்

27.—எண் என்பது என்ன?

எண் என்பது பொருள்களின் அளவு; அது, ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டது என்பதைத் தெரிவிக்கும்.

ஒன்றைத் தெரிவிப்பது ஒருமை.

ஒன்றுக்கு மேற்பட்டவற்றைத் தெரிவிப்பது பன்மை.

28.—ஒருமை, பன்மைகளுக்கு உரிய பால்கள் எவை?

ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் ஆகிய மூன்றும் ஒருமைக்கு உரிய பால்கள்.

பலர்பால், பலவின்பால் ஆகிய இரண்டும் பன்மைக்கு உரிய பால்கள்.

பயிற்சி — 6.

(1) ஒருமை, பன்மைகளுக்குப் பத்து உதாரணம் எழுது. (2) இன்று உன் வாசக பாடத்தில் வரும் பெயர்களில் ஒருமைக்குப் பன்மையும் பன்மைக்கு ஒருமையும் எழுது.

(4) இடம்

29.—இடம் என்பது என்ன?

இடம் என்பது ஸ்தானம். அது, தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்று வகைப்படும்.

1. பேசுவோன்..........தன்மை இடம்.
2. முன் நிற்போன்.....முன்னிலை இடம்.
3. பேசப்படுவோன்.....படர்க்கை இடம்.

குறிப்பு — தன்மை முன்னிலைப் பெயர்கள் — ஒருமை, பன்மைகளையும்; படர்க்கைப் பெயர்கள் — திணை, பால்களையும் உணர்த்தும்.

1. தன்மை
   - ஒருமை—நான், யான்.
   - பன்மை—நாம், யாம். நாங்கள், யாங்கள்.
2. முன்னிலை
   - ஒருமை—நீ.
   - பன்மை—நீர், நீங்கள்.
3. படர்க்கை
   - ஒருமை—அவன், அவள், அது.
   - பன்மை—அவர்கள், அவைகள்.

பயிற்சி — 7.

தன்மை		முன்னிலை		படர்க்கை	
ஒருமை	பன்மை	ஒருமை	பன்மை	ஒருமை	பன்மை

கீழ் வாக்கியங்களில் வரும் பெயர்ச் சொற்களை முன் பக்கத்தில் காட்டிய அட்டவணையிற் பொருத்து :

1. நான் புத்தகம் வாங்கினேன்.
2. நாங்கள் அவர்களைக் கண்டோம்.
3. இடையன் ஆடுகளை மேய்த்தான்.
4. நீ பள்ளிக்கூடம் போ.
5. நீங்கள் எங்கள் மனிதர்களைச் சந்தித்தீர்களா ?

(5) வேற்றுமை

30.—வேற்றுமை என்றால் என்ன ?

வருமொழியைக்கொண்டு பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமையாம் ; அது எட்டு வகைப்படும்.

முதல் வேற்றுமை

31.—முதல் வேற்றுமை என்பது என்ன ?

பெயரின் இயல்பான பெயரே முதல் வேற்றுமையாம். அது எழுவாய் வேற்றுமை எனவும் சொல்லப்படும்.

மனிதன், பலகை, வீடு, மரம்.

இரண்டாம் வேற்றுமை.

32.—இரண்டாம் வேற்றுமையின் உருபு என்ன ?

இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ என்பதாம். அது செயப்படுபொருள் வேற்றுமை எனவும் சொல்லப்படும்.

அவன் பலகையை எடுத்தான்............(ஐ)

பயிற்சி — 8.

கீழ்வரும் சொற்களுக்கு இரண்டாம் வேற்றுமை உருபு சேர்த்து எழுது :—பலகை, பாளை, பூனை, வீடு, மரம், கல், மண், வயிறு, தலை.

மூன்றும் வேற்றுமை.

33.—மூன்றும் வேற்றுமையின் உருபுகள் எவை ?

மூன்றும் வேற்றுமையின் உருபுகள் ஆல், ஓடு, உடன் என்பனவாம்.

(1) தச்சனுல் வீடு கட்டப்பட்டது (ஆல்)
(2) தந்தையோடு மகன் வந்தான் (ஓடு)
(3) அரசனுடன் மந்திரி சென்றுன் (உடன்)

பயிற்சி — 9.

1. ஆல், ஒடு, உடன் ஆகிய இவ் வுருபுகள் வர ஒவ்வொன்றுக்கும் மூன்று உதாரண வாக்கியங்கள் எழுது.

2. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள மூன்றும் வேற்றுமைச் சொற்களை எடுத்தெழுது.

(1) நான் உபாத்தியாயரோடு சென்றேன்.
(2) அரசனுல் அனுப்பப்பட்ட தூதன்.
(3) அவன் என்னுடன் வந்தான்.
(4) இந்த ஓடு அவனேடு இருக்கக் கண்டேன்.
(5) நீ இராமனேடு ஓடுவாயா ?

நான்காம் வேற்றுமை.

34.—நான்காம் வேற்றுமையின் உருபு எது ?

நான்காம் வேற்றுமையின் உருபு கு என்பதாம்.

முருகன் எனக்கு அன்னமிட்டான் (கு)

பயிற்சி — 10.

பாக்கு, நா, பல், எறும்பு, மூக்கு இவற்றிற்கு நான்காம் வேற்றுமை யுருபு சேர்த்து எழுது.

(1) தேக்கு உனக்குத் தெரியுமா ?
(2) முதலைக்கு நாக்கு இல்லை.

இவற்றிலுள்ள நான்காம் வேற்றுமைச் சொற்களை எடுத்து எழுது.

ஐந்தாம் வேற்றுமை.

35.—ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள் எவை ?

ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள் இன், நின்று, இருந்து என்பனவாம்.

(1) மலையின் வீழ் அருவி (இன்)
(2) நான் வீட்டினின்று போனேன் (நின்று)
(3) அவன் ஊரிலிருந்து வந்தான் (இருந்து)

பயிற்சி — 11.

1. பொன்னின் தங்கம் விலை உயர்ந்தது.
2. வேலன் மரத்தினின்று இறங்கினன்.
3. நான் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தேன்.

இவற்றிலுள்ள ஐந்தாம் வேற்றுமைச் சொற்களை எடுத்தெழுது.

ஆறம் வேற்றுமை.

36.—ஆறும் வேற்றுமையின் உருபுகள் எவை ?

ஆறும் வேற்றுமையின் உருபுகள் அது, உடைய என்பனவாம்.

(1) இது அரசனது நாடு (அது)
(2) அது வரதனுடைய பலகை (உடைய)

பயிற்சி — 12.

1. எனது புத்தகம் சிறந்தது.
2. அது இராமனுடைய வீடு.
3. வேலனது பலகை உடையாதது.

இவற்றில் ஆறும் வேற்றுமைச் சொற்கள் எவை ?

ஏழாம் வேற்றுமை.

37.—ஏழாம் வேற்றுமை உருபுகள் எவை ?

ஏழாம் வேற்றுமையின் உருபுகள் இல், கண் என்பனவாம்.

(1) அவன் வீட்டில் இருந்தான் (இல்)
(2) முருகன் சபையின்கண் வந்தான் (கண்)

பயிற்சி — 13.

1. பள்ளிக்கூடத்தில் விளையாடினேம்.
2. அவன் கண்ணில் நீர் வருகிறது.
3. மலையின்கண் விளக்கு வைத்தான்.

இவற்றில் ஏழாம் வேற்றுமைச் சொற்களை எழுது.

எட்டாம் வேற்றுமை.

38.—எட்டாம் வேற்றுமையின் உருபுகள் எவை ?

எட்டாம் வேற்றுமையின் உருபுகள் ஏ, ஆ என்பனவாம்.

(1) மகளே! போ (ஏ)
(2) அண்ணா! வா (ஆ)

பயிற்சி — 14.

மகனே, எங்கு வந்தாய்? பொன்னா, இங்கே வா: இவற்றில் எட்டாம் வேற்றுமைச் சொற்கள் எவை ?

மகன், மனை, வீடு, கண், மனம் — இவைகளுக்குத் தனித்தனி எட்டு வேற்றுமைகளையும் சேர்த்து ஒருமை பன்மைகளுடன் எழுது.

39.—யான் என்பது உருபேற்றால் எவ்வாறாம்?

யான் என்பது உருபு ஏற்கும்போது என் எனத் திரியும்.

1. யான் 2. என்னை 3. என்னால் 4. எனக்கு
5. என்னின் 6. எனது 7. என்னில் 8. ———

40.—நாம், யாம் என்பன உருபேற்றால் எவ்வாறாம்?

நாம், யாம் என்பன உருபேற்றால் நாம் என்பது நம் எனவும், யாம் என்பது எம் எனவும் திரியும்.

1. நாம் 2. நம்மை 3. நம்மால் 4. நமக்கு
5. நம்மின் 6. நமது 7. நம்மில் 8. ———

1. யாம் 2. எம்மை 3. எம்மால் 4. எமக்கு
5. எம்மின் 6. எமது 7. எம்மில் 8. ———

41.—நீ, நீர் என்பன உருபேற்றால் எவ்வாறாம்?

நீ, நீர் என்பன உருபேற்றால் நீ என்பது உன் எனவும், நீர் என்பது உம் எனவும் திரியும்.

1. நீ 2. உன்னை 3. உன்னால் 4. உனக்கு
5. உன்னின் 6. உனது 7. உன்னில் 8. ———

1. நீர் 2. உம்மை 3. உம்மால் 4. உமக்கு
5 உம்மின் 6. உமது 7. உம்மில் 8. ———

42.—தான், தாம் என்பன உருபேற்ருல் எவ்வாறும்?

தான், தாம் என்பன உருபேற்ருல் தான் என்பது தன் எனவும், தாம் என்பது தம் எனவும் திரியும்.

1. தான் 2. தன்னை 3. தன்ஞல் 4. தனக்கு
5. தன்னின் 6. தனது 7. தன்னில் 8. ———

1. தாம் 2. தம்மை 3. தம்மால் 4. தமக்கு
5. தம்மின் 6. தமது 7. தம்மில் 8. ———

43.—மகரத்தை ஈற்றிலே யுடைய பெயர்ச் சொற்கள் உருபேற்ருல் எவ்வாறும்?

மகர ஈற்றுப் பெயர்ச் சொற்கள் உருபு ஏற்கும்போது அம் என்பது கெட அத்-துச் சாரியை பெறும்.

1. மரம் 2. மரத்தை 2. மரத்தால் 4. மரத்துக்கு
5. மரத்தின் 6. மரத்தினது 7. மரத்தில் 8. மரமே.

குறிப்பு — மரம் என்பதில் அம் கெட **மர்** என நிற்கும், அதனேடு **அத்து** என்பது சேர (மர் + அத்து) மரத்து என்-ருகும். அதனேடு இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐ என்பது சேர **மரத்தை** என்ருயிற்று.

44.—அகரத்தை ஈற்றிலே யுடைய பெயர்ச் சொற்கள் உருபேற்ருல் எவ்வாறும்?

அகர ஈற்றுப் பெயர்ச் சொற்கள் உருபு ஏற்ருல் அற்றுச் சாரியை பெறும்.

பல + ஐ = பலவற்றை
சில + ஆல் = சிலவற்ருல்

குறிப்பு — பலவற்றை என்பதைப் பிரித்தால், பல + அற்று + ஐ என்ருகும்; இதன் இடையில் நின்ற அற்று என்பது சாரியையாம்.

45.—வை என்னும் எழுத்தை ஈற்றிலேயுடைய பெயர்ச் சொற்கள் எவ்வாறு உருபேற்று வரும்?

வையீற்றுப் பெயர்ச் சொற்கள் உருபு ஏற்கும்போது ஐ என்பது கெட அற்றுச் சாரியை பெறும்.

அவை + ஐ (அவை + அற்று + ஐ) = அவற்றை
எவை + ஐ (எவை + அற்று + ஐ) = எவற்றை

46.—எல்லாம் என்னும் பெயர் உருபேற்ருல் எவ்வாரும்?

எல்லாம் என்னும் பெயர் உருபேற்ருல் ஈற்று மகரங்கெட, அற்றுச் சாரியையும் உருபின் மேல் உம்மும் பெறும்.

எல்லாம் + ஐ = (எல்லா + அற்று + ஐ) =
எல்லாவற்றை + உம் = எல்லாவற்றையும்.

47.—பெயர்ச் சொல்லுக்கு இலக்கணம் கூறுவ தெப்படி?

ஒரு பெயர்ச் சொல்லுக்கு இலக்கணங் கூறும்போது திணை, பால், எண், இடம், வேற்றுமையும், முடிபும் கூற வேண்டும்.

கந்தன் கடைக்குப் போனுன்

கந்தன் — உயர் திணை, ஆண்பால், படர்க்கை, ஒருமை, முதல்வேற்றுமை, போனுன் என்னும் வினைமுற்று (அல்லது பயனிலை) க்கு எழுவாயாக நின்றது.

பயிற்சி — 15.

1. முருகன் வேலனை வீதியில் கண்டான்.
2. இராமனல் கட்டப்பட்ட வீடு இது.
3. தந்தையோடு மகன் வந்தான்.
4. எனது பலகை உடைந்தது.

5. அண்ணு, ஊரிலிருந்து வந்த என் தம்பி புத்தகம் வாங்கினுன்.

6. நீ அவர்கள் வீட்டைக் கண்டாயா ?

7. நாம் அனுப்பிய மனிதன் வந்தான்.

இதில் வந்த பெயர்ச் சொற்களுக்கு இலக்கணங் கூறு.

பெயர்	திணை	பால்	இடம்	எண்	வேற்றுமை	முடிபு

2. வினைச் சொல்

48.—வினைச்சொல் என்றால் என்ன ?

பொருளின் தொழிலை உணர்த்துவது வினைச் சொல்லாம். (வினை = தொழில்.)

முருகன் படித்தான்

குறிப்பு — இதில் படித்தான் என்னுஞ் சொல் முருகன் என்னும் பொருளின் தொழிலாகிய படித்ததை உணர்த்தி நின்றமையால் படித்தான் என்பது வினைச்சொல்லாம்.

49.—வினைச்சொல் எதைக் காட்டும்? எதை ஏற்காது ?

வினைச் சொல் (பெயர்ச் சொல்லைப் போல்) திணை, பால், இடங்களைக் காட்டுவ-தோடு, காலத்தையுங் காட்டும். பெயர்ச் சொல்லைப் போல் வேற்றுமையை ஏற்காது.

முருகன் படித்தான்

குறிப்பு — இதில் **படித்தான்** என்பது உயர்திணை ஆண்பால் படர்க்கையையும், தொழில் நடந்துவிட்டதாகிய காலத்தையும் காட்டியது. ஆனால், அது வேற்றுமையை ஏற்காது.

179897

50.—காலமாவது யாது? அது எத்தனை வகை?

காலமாவது வினை நிகழும் காலத்தைக் காட்டுவது. அது — இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் என மூன்று வகைப்படும்.

51.—இறந்த காலமாவது யாது?

செயல் நடந்துவிட்ட காலம் இறந்த காலமாம்.

செய்தான், கொண்டான், சென்றான்.

J3
P31
N23

52.—இறந்த காலத்தைக் காட்டும் இடைநிலைகள் எவை?

த், ட், ற், இன் என்பவற்றில் ஏற்ற ஒன்று வினைச்சொல்லுக்கு இடையில் நின்று இறந்த காலத்தைக் காட்டும்.

1. செய்தான் (செய்+த்+ஆன்)............(த்)
2. கொண்டான் (கொள்+ட்+ஆன்).....(ட்)
3. சென்றேன் (செல்+ற்+ஏன்) ....(ற்)
4. பாடினோம் (பாடு+இன்+ஓம்).....(இன்)

குறிப்பு — இதில் த், ட், ற், இன் என்பவை முறையே சொல்லுக்கு இடையே நின்று இறந்தகாலத்தைக் காட்டி வருதலால் இவை இறந்தகால இடைநிலைகள் எனப்படும்.

53.—நிகழ்காலத்தைக் காட்டும் இடை நிலைகள் எவை?

கிறு, கின்று என்பவற்றில் ஏதேனும் ஒன்று வினைச் சொல்லுக்கு இடையில் நின்று நிகழ்காலத்தைக் காட்டும்.

1. செய்கிறான் (செய்+கிறு+ஆன்)....... (கிறு)
2. செய்கின்றான் (செய்+கின்று+ஆன்)...(கின்று)

குறிப்பு — இங்கே கிறு, கின்று என்பவை முறையே சொல்லுக்கு இடையில் நின்று நிகழ்காலத்தைக் காட்டின. இவை சொல்லுக்கு இடையில் நின்று நிகழ்காலத்தைக் காட்டுகின்றமையால் நிகழ்கால இடைநிலைகளாம்.

54.—எதிர்காலத்தைக் காட்டும் இடைநிலைகள் எவை ?

ப், வ் என்பவற்றில் ஏற்ற ஒன்று வினைச் சொல்லுக்கு இடையே நின்று எதிர் காலத்தைக் காட்டும்.

1. தின்பான் (தின் + ப் + ஆன்)....................(ப்)
2. செய்வான் (செய் + வ் + ஆன்)....................(வ்)

குறிப்பு — இதில் ப், வ் என்பவை முறையே சொல்லுக்கு இடையில் நின்று எதிர்காலத்தைக் காட்டின. ஆகையால் இவை **எதிர்கால இடைநிலைகளாம்.**

பயிற்சி — 16.

1. பெயர்ச் சொல்லுக்கும், வினைச் சொல்லுக்கும் உள்ள பேதம் யாது ?

2. வந்தாள், போவோம், படிக்கிருள், நின்ருள், வருகின்றது, போவாள், கண்டன, செய்கின்ருேம், ஓடிற்று, நடப்போம்; இவற்றில் ஒவ்வொன்றும் காட்டும் திணை, பால், இடம், காலம் இவற்றைக் கூறு.

3. மேற்கூறிய சொற்களில் வரும் இடைநிலைகளைப் பிரித்தெழுதி அவை ஒவ்வொன்றும் காட்டும் காலத்தையும் தனித்தனி எழுது.

4. மேற்கூறிய வினைச்சொற்கள் காட்டும் காலத்தையெழுதி அவற்றில் ஒவ்வொன்றுக்கும் மற்ற இரண்டு காலங்களையும் எழுது.

5. காலங்கள் எத்தனை ? அவை யாவை ? அவற்றைக் காட்டும் இடைநிலைகள் எவை ?

55.—வினைச்சொல்லின் இடையே நிற்பவை இடைநிலைகள் என்றால், முதலில் நிற்பதற்குப் பெயர் என்ன?

வினைச் சொல்லின் முதலில் நிற்பதற்குப் பகுதி என்று பெயர்.

படித்தான், சிரித்தாள்,
எழுதினேன், வந்தோம், (வா)
நின்றது, (நில்) கண்டன, (காண்)

குறிப்பு — இவற்றில் படி, சிரி, எழுது, வா, நில், காண் என்பவை வினைப்பகுதிகளாம்.

56.—வினைச்சொற்களின் கடையில் நிற்பது யாது?

வினைச் சொல்லின் கடையில் நிற்பது விகுதியாம்.

வந்தேன், வந்தோம், வந்தாய்,
வந்தீர், வந்தான், வந்தாள்,
வந்தார், வந்தது, வந்தன.

இவ் வினைமுற்றுக்களின் கடையில் நிற்கும் என், ஓம் ஆய், ஈர், ஆன், ஆள், ஆர், து, அ என்பன விகுதிகளாம்.

57.—வினைச்சொற்கள் எத்தனை வகைப்படும்?

தன்மை வினை, முன்னிலை வினை, படர்க்கை வினை, வியங்கோள் வினை, ஏவல் வினை என வினைச்சொற்கள் ஐந்து வகைப்படும்.

1. வந்தேன்..(என்)
இதில் என் என்பது தன்மை ஒருமையைக் காட்டிற்று.

2. வந்தோம்..(ஓம்)
இதில் ஓம் என்பது தன்மைப் பன்மையைக் காட்டிற்று.

3. வந்தாய் ....(ஆய்)

இதில் ஆய் என்பது முன்னிலை ஒருமையைக் காட்டிற்று.

4. வந்தீர் ....(ஈர்)

இதில் ஈர் என்பது முன்னிலைப் பன்மையைக் காட்டிற்று.

5. வந்தான் ....(ஆன்)

இதில் ஆன் என்பது உயர்திணை ஆண்பால் படர்க்கையைக் காட்டிற்று.

6. வந்தாள் ....(ஆள்)

இதில் ஆள் என்பது உயர்திணைப் பெண்பால் படர்க்கையைக் காட்டிற்று.

7. வந்தார் ....(ஆர்)

இதில் ஆர் என்பது உயர்திணைப் பலர்பால் படர்க்கையைக் காட்டிற்று.

8. வந்தது ....(து)

இதில் து என்பது அஃறிணை ஒன்றன்பால் படர்க்கையைக் காட்டிற்று.

9. வந்தன ....(அ)

இதில் அ என்பது அஃறிணைப் பலவின்பால் படர்க்கையைக் காட்டிற்று.

10. வருக ....(க)

இதில் க என்பது வியங்கோளாகிய மரியாதை ஏவலைக் காட்டிற்று.

11. வா ....(வா)

இதில் வா என்பது ஏவலைக் காட்டிற்று. வினைப்பகுதிகளைப் போல்வன எல்லாம் ஏவல்களாம்.

58.—வேறு வினைமுற்றுக்கள் எவை ?

தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை, செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றாவினை என்பனவாம்.

படித்தேன் ... ... தன்வினை.
படிப்பித்தேன் ... ... பிறவினை.
நாயை வளர்த்தேன் ... ... செய்வினை.
நாய் என்னால் வளர்க்கப்பட்டது...செயப்பாட்டுவினை.
வந்தேன் ... செயப்படுபொருள் குன்றியவினை.
தின்றான் ... செயப்படுபொருள் குன்றாவினை.

59.—எச்சமாவது யாது ?

விகுதியால் திணை, பால், இடங்களைக் காட்டாதது எச்சமாம். அது, பெயரெச்சம், வினையெச்சம் என இரண்டு வகைப்படும்.

60.—பெயரெச்சமாவது யாது ?

பெயரைக் கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சமாம். அது, இறந்தகாலப் பெயரெச்சம், நிகழ்காலப் பெயரெச்சம், எதிர்காலப் பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம் என நான்கு வகையாம்.

(I) செய்த மனிதன். (அ)

செய்த — இதில் செய் என்னும் பகுதி **த்** என்னும் இறந்தகால இடைநிலையும் அ என்னும் விகுதியும் பெற்று இறந்தகாலப் பெயரெச்சமாயிற்று.

(2) செய்கின்ற மனிதன். (அ)

செய்கின்ற — இதில் செய் என்னும் பகுதி **கின்று** என்னும் நிகழ்கால இடைநிலையும், அ என்னும் விகுதியும் பெற்று நிகழ்காலப் பெயரெச்சமாயிற்று.

(3) செய்யும் மனிதன். (உம்)

செய்யும் — இதில் செய் என்னும் பகுதி உம் என்னும் விகுதியைமட்டும் பெற்று எதிர்காலப் பெயரெச்சமாயிற்று. இது இடைநிலை பெருது.

61.—எதிர்மறைப் பெயரெச்சம் எப்படி வரும்?

வினைப் பகுதியோடு ஆத என்பது சேர்ந்து வரின் எதிர்மறைப் பெயரெச்சமாம்.

படியாத பையன். (ஆத)

படியாத — இதில் படி யென்னும் பகுதி **ஆத** என்பதைப் பெற்று எதிர்மறைப் பெயரெச்சமாயிற்று.

62.—வினையெச்சமாவது யாது?

வினையைக் கொண்டு முடியும் எச்சம் வினையெச்சமாம். அது, இறந்தகால வினையெச்சம், நிகழ்கால வினையெச்சம், எதிர்கால வினையெச்சம், எதிர்மறை வினையெச்சம் என நான்கு வகைப்படும்.

63.—இறந்தகால வினையெச்சமாவது யாது?

ஒரு வினைப் பகுதி உ, இ, ய் என்பவற்றில் ஏற்ற ஒன்றை ஈற்றில் பெற்று வருவது இறந்தகால வினையெச்சமாம்.

செய்து வந்தான் — (உ)
ஓடிப் போயிற்று — (இ)
போய் நின்றான் — (ய்)

64.—நிகழ்கால வினையெச்சமாவது யாது?

ஒரு வினைப்பகுதி அகரத்தை ஈற்றிலே பெற்று வருவது நிகழ்கால வினையெச்சமாம்.

தின்ன வந்தேன் (அ)

65.—எதிர்கால வினையெச்சமாவது யாது?

ஒரு வினைப்பகுதி இன், ஆல், கால் என்பவற்றில் ஒன்றை ஈற்றிலே பெற்று வருவது எதிர்கால வினையெச்சமாம்.

செய்யின் கொடுப்பேன் ... (இன்)
செய்தால் கொடுப்பேன் ... (ஆல்)
செய்தக்கால் கொடுப்பேன் ... (கால்)

66.—எதிர்மறை வினையெச்சமாவது யாது?

ஒரு வினைப்பகுதி ஆது, ஆமல், ஆமே என்பவற்றில் ஏற்ற ஒன்றை ஈற்றில் பெற்று வருவது எதிர்மறை வினையெச்சமாம்.

உண்ணாது வந்தான் ... ... (ஆது)
உண்ணாமல் வந்தான் ... ... (ஆமல்)
உண்ணாமே வந்தான் ... ... (ஆமே)

3. இடைச் சொல்

67.—இடைச் சொல்லாவது யாது?

தனித்து வழங்காமல், பெயர் வினைகளை அடுத்து வருவது இடைச் சொல்லாம்.

68.—இடைச் சொற்கள் எவை ?

வேற்றுமையுருபுகள், விகுதிகள், இடை-நிலைகள், சாரியைகள், உவமை உருபுகள், சுட்டு, வினு முதலிய சொற்கள் இடைச் சொற்களாம்.

வீட்டைக் கட்டினுன்	ஐ		வேற்றுமையுருபு.
வந்தான் ...	ஆன்	...	விகுதி.
மரத்தை ...	அத்து	...	சாரியை.
பூனைபோல வந்தான்	போல	...	உவமை.
அம் மனிதன்	அ	...	சுட்டு.
எந் நாடு ?	எ	...	வினு.

4. உரிச் சொல்

69.—உரிச்சொல்லாவது யாது ?

பெயர் வினைகளுக்கு உரிமை பூண்டு நிற்கும் சொல் உரிச்சொல்லாம்.

70.—உரிச்சொல் எத்தனை வகைப்படும் ?

உரிச்சொல் இரண்டு வகைப்படும். அவை, பெயருரிச்சொல், வினையுரிச்சொல் என்பனவாம்.

நனி பேதை....................(நனி)

இங்கு, நனி என்பது பேதை என்னும் பெயரை விசே-டித்து நிற்பதால் பெயருரிச் சொல்லாம்.

சாலத் தின்றுன் (சால)

இங்கு, சால என்பது தின்றுன் என்னும் வினையை விசேடித்து நிற்பதால் வினையுரிச் சொல்லாம்.

III. வாக்கியம்

71.—வாக்கியம் என்றால் என்ன ?

ஏதேனும் ஒரு கருத்து முடியும்படி சொற்கள் தொடர்ந்து நிற்பது வாக்கியமாம்.

72.—சொற்கள் தொடர்ந்து நிற்பதனாலேயே வாக்கியம் முற்றுமா ?

முற்றாது, சொற்கள் பல தொடர்ந்து நின்றாலும் கருத்து முடியாவிட்டால் வாக்கியம் ஆகாது.

73.—அது எப்படி ?

'நான் பட்டணம் போய்' என்பதில் மூன்று சொற்கள் தொடர்ந்து நின்றும், கருத்து முடியவில்லை; அதனால் அத்தொடர் வாக்கியமாகவில்லை.

74.—முடிந்த வாக்கியம் எப்படி இருக்கும் ?

'நான் பட்டணம் போய் ஒரு புத்தகம் வாங்கினேன்' என்பதில் ஒரு விஷயம் முடிந்ததாகத் தெரிகிறது.

75.—வாக்கியம் முடிவதற்கு என்னென்ன உறுப்புக்கள் இருக்க வேண்டும் ?

1. செய்பவன், 2. (அவன்) செய்யும் தொழில், 3. அவன் செய்யும் தொழிலை ஏற்கும் பொருள் ஆக மூன்று உறுப்புக்கள் ஒரு வாக்கியத்தில் இருக்கவேண்டும்.

76.—இவை மூன்றுக்கும் முறையே பெயர் என்ன?

1. எழுவாய், 2. பயனிலை, 3. செயப்படுபொருள் என்பனவாம்.

77.—எழுவாய் என்பதென்ன?

காரியம் செய்ய முதன்மையாக நிற்பது அல்லது நிற்பவன் எழுவாயாம்.

78.—எழுவாய் என்பதற்கு அர்த்தமென்ன?

எழு+வாய்; எழு=உண்டாகிற, வாய் = இடம்; உண்டாகிற இடம் என்பதாம்.

79.—உண்டாகிற இடம் என்றால் என்ன?

வாக்கியம் உண்டாவதற்கு ஆதாரமான இடம்; (அதாவது காரியம் செய்ய முதன்மையாக நிற்பதைக் குறிக்கும்.)

80.—பயனிலையாவ தென்ன?

பயன் + நிலை; பயன் = பிரயோஜனம், நிலை = நிற்குமிடம்; பிரயோஜனம் நிற்கும் இடம். அதாவது, எழுவாய் செய்யும் காரியத்தின் பயன் நிற்பதைக் குறிக்கும்.

81.—செயப்படுபொருளாவ தென்ன?

செய + படு + பொருள்; செய = செய்தலை, படு பொருள் = அடையும் பொருள்; பயனிலையை அடைகிற பொருள். (அதாவது, எழுவாய் செய்கிற காரியத்தை அடையும் பொருளைக் குறிப்பது.)

82.—'முருகன் புத்தகம் வாங்கினன்' என்னும் வாக்கியத்தில் செயப்படுபொருள் எது?

'முருகன் புத்தகம் வாங்கினன்' இதில் புத்தகம் என்பது செயப்படுபொருள்.

83.—அது எப்படி?

(a) வாங்கும் தொழிலுக்கு முருகன் செய்பவனாக நின்றமையால், 'முருகன்' என்பது எழுவாய்.

(b) முருகன் செய்த தொழில் வாங்கியது; ஆகையால், 'வாங்கினன்' என்பது பயனிலை.

(c) முருகன் வாங்கிய தொழிலை அடைந்த பொருள் புத்தகம்; ஆகையால், 'புத்தகம்' என்பது செயப்படுபொருள்.

84.—இவைகளில் எதெது என்னென்ன சொல்லாக இருக்கும்?

இவற்றில் எழுவாயும், செயப்படுபொருளும் பெயர்ச்சொற்களாகவும், பயனிலை வினைச் சொல்லாகவும் இருக்கும்.

85.—இதில் இரண்டு பெயர்ச் சொல்லாகவும், ஒன்று வினைச் சொல்லாகவும் இருந்தால், இவைகளை எப்படிப் பகுத்தறிவது?

இவற்றில் பயனிலை வினைச்சொல்லாகவே இருக்குமாதலால், முதலில் பயனிலையைக் கண்டுபிடிக்க வேண்டும்.

86.—'முருகன் புத்தகம் வாங்கினான்' என்னும் வாக்கியத்தில் வினைச் சொல் எது?

'வாங்கினான்' என்பது வினைச்சொல்.

87.—அவ்வினைச்சொல்லை எதுவாகக் கொள்ளவேண்டும்?

பயனிலையாகக் கொள்ளவேண்டும்.

88.—வாக்கியத்தில் வரும் வினைச் சொற்கள் எல்லாம் பயனிலை யாகுமா?

ஆகாது; ஒரு வாக்கியத்தில் பல வினைச் சொற்கள் இருந்தாலும், ஒரே வினைதான் முடிந்த வினையாக இருக்கும். அதுவே பயனிலையாம்.

89.—அதற்கு உதாரணம் சொல்லு?

'அவன் கடைக்குப்போய், புத்தகம் வாங்கிப் பார்த்துக் கொடுத்துவிட்டான்' என்பதில் போய், வாங்கி, பார்த்து, கொடுத்துவிட்டான் என நான்கு வினைகள் இருக்கின்றன; ஆனால், இவற்றில் முடிந்த வினைச்சொல் 'கொடுத்துவிட்டான்' என்பதாம்.

90.—ஆகையால் மேல் வாக்கியத்திற் பயனிலை யாது?

'கொடுத்துவிட்டான்' என்னும் வினைமுற்றே பயனிலையாம்.

91.—எழுவாயைக் கண்டுபிடிப்பது எப்படி?

பயனிலைக்கு முன் 'யார்' அல்லது 'எது' என்னும் சொல்லைத் திணைக்குத் தக்கபடி வைத்துக் கேள்வி கேட்டால், அதற்கு வருகிற விடையே எழுவாயாம்.

92.—எந்தத் திணைக்கு எந்தச் சொல்லை வைத்துக் கேட்க வேண்டும்?

உயர்திணைக்கு 'யார்' என்பதையும், அஃறிணைக்கு 'எது' என்பதையும் வைத்துக் கேட்க வேண்டும்.

93.—அதெப்படி? மேல் வாக்கியத்தில் வினவிக் காட்டு.

(வினா) யார் கொடுத்துவிட்டான்?
(விடை) அவன்.

94.—ஆகையால், அவன் என்பது என்ன?

அவன் என்பது எழுவாய்.

95.—எழுவாய் எப்பொழுதும் வெளிப்படையாகவே இருக்குமோ?

எழுவாய் மறைந்திருப்பதும் உண்டு.

96.—அதெப்படி? விளக்கிக் காட்டு.

'பள்ளிக்கூடம் போ' இதில் போ என்னும் பயனிலைக்கு முன், 'யார்' என்னும் சொல்லை வைத்து, 'யார் போ?' என்று கேட்டால், 'நீ' என்னும் விடை வரும். நீ என்பது வாக்கியத்தில் இல்லாவிட்டாலும், அது அங்கு மறைந்திருக்கிறது.

97.—அப்படி மறைந்து இருக்கும் எழுவாய்க்கு என்ன பெயர்?

தோன்றா எழுவாய் என்று பெயர்.

98.—அதை எழுதுவது எப்படி?

நீ தோன்றா எழுவாய் (அல்லது தோ. எ.) என்று எழுத வேண்டும்.

99.—எழுவாய் வாக்கியத்தில் எவ்விடத்தே நிற்கும்?

எழுவாய் வாக்கியத்தின் முதலில் நிற்கும்.

100.—அப்படியானுல் வாக்கியத்தின் முதலில் நிற்கும் சொல்லேயே ஏன் எழுவாயாகக் கொள்ளலாகாது?

எழுவாய் சாதாரணமாக வாக்கியத்தின் முதலிலேயே நிற்கும்; ஆயினும், அதற்கு அடைமொழிகளாக வேறு சில சொற்கள் முன்னே சேர்ந்து வருவதும் உண்டு.

101.—அதெப்படி?

'நல்ல பையன் பள்ளிக்கூடம் ஒழுங்-காகப் போவான்' என்னும் வாக்கியத்தில் பையன் என்பது எழுவாயாக இருக்க 'நல்ல' என்னும் சொல் பையனுடைய குணத்தை விசேஷப்படுத்த முன்னே வந்தது.

102.—இவ்விதமாகப் பயனிலேக்கு வருவதில்லேயோ?

பயனிலேக்கும் இவ்வாறு அடைமொழி சேர்ந்து வருவதுண்டு.

103.—அதெப்படி?

மேல் வாக்கியத்தில் 'போவான்' என்-னும் பயனிலேயை விசேஷப்படுத்த 'ஒழுங்-காக' என்னும் சொல் முன்னே வந்தது.

104.—அடைமொழிகள் மாத்திரந்தான் முன்னே வருமோ? வேறு சொற்களும் சேர்ந்து வருமோ?

வேறு சொற்களும் சேர்ந்து வரும்; 'பாடசாலேக்கு வந்த பையன் வழியில் தன்

நேசனைக் கண்டான்' இதில் பையன் என்பது எழுவாய்; இதன் முன், 'பாடசாலைக்கு வந்த' என்னும் சொற்கள் வந்தன.

105.—பயனிலை பெயர்ச்சொல்லாக இருந்தால், எழுவாயை எப்படிக் கண்டுபிடிப்பது?

வினைச் சொல்லாக இருக்கும் பயனிலைக்கு எப்படியோ அப்படியே.

106.—அதை ஒரு வாக்கியத்தில் விளக்கிக் காட்டு?

'இது என் வீடு' என்னும் வாக்கியத்தில் 'வீடு' என்பது பெயர்ப் பயனிலை. இதன்முன் 'எது' என்பதை வைத்து 'எது வீடு' என்று வினவினல், 'இது' என்னும் விடைவரும். அதனல், 'இது' என்பது எழுவாயாக வரும்.

107.—எழுவாயும் பயனிலையும் வரும்படி இரண்டு வாக்கியங்கள் சொல்லு?

1. சந்திரன் இரவில் ஒளி கொடுக்கிறது.
2. எல்லாம் படைத்தவர் கடவுள்.

108.—மேல் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலைகளைப் பிரித்துக் காட்டு?

எண்	எழுவாய்	பயனிலை
1.	சந்திரன்	கொடுக்கிறது.
2.	படைத்தவர்	கடவுள் (பெ·ப.)

109.—ஒரு வாக்கியத்தில் ஒரே எழுவாய் ஒரே பயனிலை-தான் இருக்குமோ ?

எழுவாய் ஒன்றுக்கு அதிகப்பட்டும் இருக்கும்; ஆனல், பயனிலை மாத்திரம் ஒன்றுதான் இருக்கும்.

'முருகனும், இராமனும் வந்தார்கள்' இதில் முருகன், இராமன் என இரண்டு எழுவாயும், வந்தார்கள் என ஒரு பயனிலையும் இருக்கின்றன.

110.—செயப்படுபொருளைக் கண்டுபிடிப்பது எப்படி ?

பயனிலைக்கு முன், 'யாரை' அல்லது, 'எதை' என்னும் சொல்லைத் திணைக்குத் தக்கபடி வைத்துக் கேள்விகேட்டால், வரும் விடையே செயப்படுபொருளாம்.

111.—எந்தெந்தத் திணைக்கு எந்தெந்தப் பதத்தை உபயோகிக்க வேண்டும் ?

உயர்திணைக்கு 'யாரை' என்றும், அஃறிணைக்கு 'எதை' என்றும் வைத்து உபயோகிக்க வேண்டும்.

112.—அதை ஒரு வாக்கியத்தில் விளக்கிக் காட்டு.

'இராமன் பலகையைச் சுத்தஞ் செய்தான்' என்னும் வாக்கியத்தில், 'சுத்தஞ்செய்தான்' என்பது பயனிலை; அதற்கு முன், 'எதை' என்னும் சொல்லை வைத்து, 'எதைச்

சுத்தஞ் செய்தான்?' என்றால், 'பலகையை' என்பது விடையாக வரும். ஆகையால், 'பலகை' என்பது செயப்படுபொருளாம். செயப்படுபொருளோடு இரண்டாம் வேற்றுமை உருபு (ஐ) வெளிப்படையாகவேனும், மறைந்தேனும் நிற்கும்.

113.—*ஒவ்வொரு வாக்கியத்திலும் செயப்படுபொருள் இருப்பதுண்டோ?*

செயப்படுபொருள் சில வாக்கியங்களில் இருக்கும், சில வாக்கியங்களில் இராது.

114.—*அது என் அப்படி?*

அது பயனிலையாகிய வினைச் சொல்லுக்குத் தக்கவாறு இருக்கும்.

115.—*அதென்ன?*

வினைச்சொல் 'செயப்படுபொருள் குன்றியவினை' என்றும், 'செயப்படுபொருள் குன்றாவினை' என்றும் இருவகைப்படும்.

116.—*இவற்றிற்கு முறையே அர்த்தமென்ன?*

'செயப்படு பொருள் குன்றிய வினை' என்றால் செயப்படு பொருள் இல்லாத வினைச் சொல்லாம்; 'செயப்படு பொருள் குன்றாவினை' என்றால் செயப்படு பொருள் உள்ள வினைச் சொல்லாம்.

117.—செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்ருவினை இவைகட்கு உதாரணம் காட்டு.

(a) இருக்கிருன், தூங்கினேன், வந்தது: இவை போன்ற வினைச்சொற்கள் செயப்படு பொருள் குன்றிய வினைகளாம்.

(b) செய்தான், படித்தேன், வாங்கினுன்: இவை போன்ற வினைச் சொற்கள் செயப்படு பொருள் குன்ருு வினைகளாம்.

118.—இவற்றை அறிவது எப்படி?

(a) இருக்கிருன், தூங்கினேன், வந்தது — இப்பதங்களின் முன், 'யாரை' அல்லது 'எதை' என்னும் சொல்லைவைத்துக் கேள்வி கேட்டால் விடை வரக்கூடாதவைகளாக இருக்கின்றன.

(b) செய்தான், படித்தேன், வாங்கினுன் என்னும் சொற்களின் முன், 'யாரை' அல்லது 'எதை' என்னும் சொல்லை வைத்துக் கேள்வி கேட்டால் விடை வரக்கூடியவை-களா யிருக்கின்றன.

இவற்றில், விடை வரக் கூடாதவை செயப்படு பொருள் குன்றிய வினையாம்; விடை வரக்கூடியவை செயப்படுபொருள் குன்ருு வினையாம்.

119.—செயப்படுபொருள் தனித்தே வருமோ?

எழுவாய் பயனிலைகள் சில அடை மொழிகளோடு சேர்ந்து வருவது போல,

செயப்படுபொருளும் சில அடைமொழிகளோடு சேர்ந்து வருவதும் உண்டு.

120.—அதை ஒரு வாக்கியத்தால் விளக்கு.

'இராமன் புதுப் பலகை வாங்கினான்' என்னும் வாக்கியத்தில் 'பலகை' என்பது செயப்படுபொருள். 'புது' என்னும் சொல் பலகையைச் சிறப்பிக்க முன்னே வந்தது.

121.—இனி எ. ப. செ. வரும்படி ஒரு வாக்கியம் சொல்லு.

வயலுக்குப் போன கந்தன் தனது நன்செய் நிலத்தை நன்றாய் உழுதான்.

122.—மேல் வாக்கியத்தில் எ. ப. செ. களை முறையுடன் பிரித்துக் காட்டு.

1. 'உழுதான்' என்பது முடிந்தவினை; ஆகையால், உழுதான் என்பது பயனிலை.

2. அதைக்கொண்டு 'யார் உழுதான் ?' என்று கேட்டால், வரும் விடை 'கந்தன்' ஆகையால், கந்தன் என்பது எழுவாய்.

3. அந்தப் பயனிலையையே வைத்துக்கொண்டு, 'எதை உழுதான் ?' என்று கேட்டால் வரும் விடை, 'நிலம்' ஆகையால், நிலத்தை என்பது செயப்படுபொருள்.

123.—எ. ப. செ. களைச் சேர்ந்து வரும் அடைமொழிகளையும் சேர்த்து எழுத வேண்டுவதில்லையோ ?

எ. ப. செ. களுக்கு உரிய அடைமொழிகளையும் சேர்த்து எழுதவேண்டும்.

124.—முடிவாக வாக்கியத்தின் பிரிவுகள் எத்தனை? அவை எவை?

வாக்கியத்திலுள்ள பிரிவுகள் மூன்று; அவை,

1. எழுவாய், 2. பயனிலை, 3. செயப்படுபொருள் என்பனவாம்.

125.—கீழ் வரும் வாக்கியங்களிலுள்ள **எ. ப. செ.** களைப் பிரித்து எழுது.

1. இராமன் காட்டுக்கு ஓடினான்.
2. மழை பெய்தால் புல் முளையும்.
3. செத்த பாம்பை வீணுக அடித்தான்.
4. மரமேறிக் கால் உடைந்தது.
5. நன்றாய்ப் படித்தால், பரீக்ஷயில் தேறுவேன்.
6. எலி அடித்தாலும் காலணு கிடைக்கும்.
7. நேற்று மாலை புத்தகம் வாங்கினான்.
8. இளமையிற் கல்.
9. மௌனம் கலகம் நாஸ்தி (நாஸ்தி = இல்லை.)
10. பகலில் கஷ்டப்படுகிற கூலியாட்கள் இரவில் நன்றாய்த் தூங்குவார்கள்.
11. வித்தை விரும்பு.
12. இராமாயணத்தைச் செய்யுளாகக் கம்பர் செய்தார்.
13. நாள்தோறும் பாடம் படி.
14. மீகாமனில்லா மரக்கலம் ஓடாது.
15. வேளைக்குச் சாப்பிடுவது நலம்.
16. எனக்கு இஷ்டம் இல்லை.
17. பெற்றோரை வணங்கு.
18. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து.
19. தம்பியும், நானும் புத்தகம் படித்தோம்.
20. எல்லாம் தெய்வச் செயல்.

எண்.	எழுவாய்.	பயனிலை.	செயப்படு பொருள்.
1	இராமன்	ஓடினான்	——
2	புல்	முளையும்	——
3	அவன் (தோ-எ)	அடித்தான்	பாம்பை
4	கால்	உடைந்தது	——
5	நான் (தோ-எ)	தேறுவேன்	——
6	காலணு	கிடைக்கும்	——
7	அவன் (தோ-எ)	வாங்கினான்	புத்தகம்
8	நீ (தோ-எ)	கல்	——
9	கலகம்	நாஸ்தி	——
10	கூலியாட்கள்	தூங்குவார்கள்	——
11	நீ (தோ-எ)	விரும்பு	வித்தை
12	கம்பர்	செய்தார்	இராமாயணத்தை
13	நீ (தோ-எ)	படி	பாடம்
14	மரக்கலம்	ஓடாது	——
15	சாப்பிடுவது	நலம்	——
16	இஷ்டம்	இல்லை	——
17	நீ (தோ-எ)	வணங்கு	பெற்றோரை
18	மனம்	மருந்து (பெ-ப)	——
19	தம்பியும் நானும்	படித்தோம்	புத்தகம்
20	எல்லாம்	தெய்வச்செயல்	——

IV. சந்தி

—சந்தி என்பதென்ன ?

நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வரு-மொழியின் முதலெழுத்தும் சேர்வது சந்தி-யாம். இதற்குப் புணர்ச்சி என்றும் பெயர்.

127.—அப்புணர்ச்சி எத்தனை வகைப்படும் ?

அது, இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி என இருவகைப்படும்.

128.—இயல்பு புணர்ச்சியாவது யாது?

நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் சேரும்போது விகார மின்றிக் கலப்பது இயல்பு புணர்ச்சியாம்.

மரம் + வளரும் = மரம் வளரும்
கரிய + காக்கை = கரிய காக்கை

129.—விகாரப் புணர்ச்சியாவது யாது? அது எத்தனை வகைப்படும்.

நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் சேரும்போது எழுத்துக்கள் தோன்றவும், எழுத்துக்கள் கெடவும், எழுத்துக்கள் திரியவும் நேர்ந்தால் அது விகாரப் புணர்ச்சியாம். அது மூன்று வகைப்படும். அவை:

1. தோன்றல் விகாரம் — எழுத்தாயினும் சாரியையாயினும் தோன்றுவது.

2. திரிதல் விகாரம் — நிலைமொழியின் ஈருவது, வருமொழியின் முதலாவது அவ் விரண்டுமாவது வேறுபடுவது.

3. கெடுதல் விகாரம் — எழுத்துக்கள் கெடுவது.

1. இந்த + பலகை = இந்தப் பலகை
இங்கு (ப்) எழுத்துத் தோன்றல்.
புளி + காய் = புளி யங் காய்
இங்கு (அம்) சாரியை தோன்றல்.

2. கல் + பலகை = கற் பலகை
இங்கு லகரம் றகரமாகத் திரிதல்.

3. நிலம் + வலயம் = நில வலயம்
இங்கு (ம்) கெடுதல்.

130.—உயிரெழுத்துக்குப் பின் உயிர் வரின் எவ்வாரும்?

உயிரெழுத்துக்களில் இ, ஈ, ஐ என்னும் எழுத்துக்களுக்குப் பின் உயிர்வரின் இடையில் யகரமெய் தோன்றும்.

1. மலை + அழகு = மலையழகு...(ய் + அ)
2. தீ + அவி = தீயவி........(ய் + அ)
3. புகை + இலை = புகையிலை...(ய் + இ)

131.—ஏகாரத்துக்குப் பின் உயிர் வந்தால் எவ்வாரும்?

ஏகாரத்திற்குப் பின் உயிர்வந்தால் சில இடத்தில் வகரமும், சில இடத்தில் யகர-
ம் தோன்றும்.

1. தே + ஆரம் = தேவாரம்........ (வ்)
2. பொன்னே + அழகு = பொன்னேயழகு (ய்)

132.—மற்ற உயிர்களுக்குப் பின் உயிர் வந்தால் எவ்வாரும்?

மற்ற உயிர்களாகிய அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் எட்டு எழுத்துக்களுக்குப் பின் உயிர்வந்தால் இடையில் வகரமெய் தோன்றும்.

1. மிக + அளித்தான் = மிகவளித்தான் (வ் + அ)
2. ஆ + இது = ஆவிது ....(வ் + இ)
3. திரு + அடி = திருவடி.........(வ் + அ)
4. பூ + அழகு = பூவழகு ....(வ் + அ)
5. எ + அளவு = எவ்வளவு ......(வ் + அ)
6. நொ + அழகா = நொவ்வழகா...(வ் + அ)
7. கோ + அழகு = கோவழகு......(வ் + அ)
8. கௌ + அழகு = கௌவழகு.....(வ் + அ)

133.—அந்த, இந்த, எந்த என்னும் சொற்களுக்குப் பின் க், ச், த், ப் வரின் எவ்வாறாம்?

அந்த, இந்த, எந்த என்னும் சொற்களுக்குப்பின் க், ச், த், ப் வரின் மிகும்.

இந்த + காக்கை = இந்தக் காக்கை
அந்த + பையன் = அந்தப் பையன்
எந்த + தலை = எந்தத் தலை

134.—அ, இ, உ என்னும் சுட்டின் முன்னும், எகர வினாவின் முன்னும் உயிர் வந்தால் எவ்வாறாம்?

அ, இ, உ என்னும் சுட்டுக்களின் முன்னும், எகர வினாவின் முன்னும் உயிர் வந்தால் வகரந் தோன்றும்.

அ + ஆடு = அவ் வாடு
இ + எருது = இவ் வெருது
உ + எருமை = உவ் வெருமை
எ + இலை = எவ் விலை

135.—தனிக்குறிலைச் சார்ந்த மெய்யெழுத்துக்குப் பின் உயிர் வந்தால் எவ்வாறாம்?

தனிக் குறிலைச் சார்ந்த மெய்யெழுத்து உயிர்வரின் இரட்டும்.

கண் + அழகு = கண்ணழகு

136.—மொழியீற்று மகரம் எப்போது திரியும்?

மொழியீற்று மகரம் ககர, சகர, தகரங்கள் வரின் முறையே ஙகர, ஞகர, நகரங்களாகத் திரியும்.

1. மனம் + களித்தான் = மனங் களித்தான்
2. மரம் + சாய்ந்தது = மரஞ் சாய்ந்தது
3. மனம் + தளர்ந்தது = மனந் தளர்ந்தது

முற்றிற்று.

179897

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

பாட புத்தகங்கள்

	ரூ.	அ.	பை.
முதல் பாட புத்தகம்	0	3	0
இரண்டாம் பாட புத்தகம்	0	3	6
மூன்றும் பாட புத்தகம்	0	4	0
நான்காம் பாட புத்தகம்	0	6	0
ஐந்தாம் பாட புத்தகம்	0	7	0
ஆறும் பாட புத்தகம்	0	7	0
ஏழாம் பாட புத்தகம்	0	8	0
எட்டாம் பாட புத்தகம்	0	10	0
ஒன்பதாம் பாட புத்தகம்	0	10	0

திராவிட வாசகங்கள்

திராவிட பால பாடம்	0	2	6
முதல் திராவிட வாசகம்	0	3	0
இரண்டாம் திராவிட வாசகம்	0	3	6
மூன்றும் திராவிட வாசகம்	0	4	0
நான்காம் திராவிட வாசகம்	0	6	0

நூதன வாசக புஸ்தகங்கள்

நூதன முதல் வாசக புஸ்தகம் ...	0	3	0
நூதன இரண்டாம் வாசக புஸ்தகம் ...	0	3	6
நூதன மூன்றும் வாசக புஸ்தகம் ...	0	4	0
நூதன நான்காம் வாசக புஸ்தகம் ...	0	6	0

கணித புஸ்தகங்கள்

புதுச் சட்டக் கணிதம் 1-2-ஆம் வகுப்பு ...	0	3	0
புதுச் சட்டக் கணிதம் 3-ஆம் வகுப்பு ...	0	6	0
புதுச் சட்டக் கணிதம் 4-ஆம் வகுப்பு ...	0	7	0

Caxton Press, Madras.